# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Website : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண்.70 /2015**

திரு. K. வேலுச்சாமி,
த/பெ கருப்பண்ணன்,
க.எண்.2/175, சக்தி கார்டன்,
அணியாபுரம், நாமக்கல் மாவட்டம்,
நாமக்கல் – 637 017. ........மேல் முறையீட்டாளர்
(திரு. K. வேலுச்சாமி மற்றும் திரு K. இராசப்பன்)

எதிர்

1) மேற்பார்வை பொறியாளர்,
நாமக்கல் மின் பகிர்மானவட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ஸ்ரீ கிருஷ்ணா வளாகம்,
32/1, கருப்பண்ணன் தெரு,
பரமத்தி ரோடு, நாமக்கல் – 637001

2) உதவி பொறியாளர்/இ &ப,
அணியாபுரம்,
நாமக்கல் மின் பகிர்மானவட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மோனுூர் மெயின் ரோடு,
நாமக்கல் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் ......... எதிர்மனுதாரர்கள்
(திரு.S.மோகன சுப்பிரமணியன், உதவி செயற்பொறியாளர்/
மோகனூர் &
திரு. S.சக்திவேல், உதவி பொறியாளர்/அணியாபுரம்)

**கேட்புரை நாள்: 24–11–2015**

**ஆணை நாள் : 11– 12–2015**

திரு. K. வேலுச்சாமி த/பெ கருப்பண்ணன், நாமக்கல் மாவட்டம் அவர்களின் 25.8.2015 நாளிட்ட மனு மேல் முறையீட்டுமனு எண்.70/2015 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 24.11.2015 அன்று நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரையின் பொழுது எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள், ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை

மேல்முறையீட்டாளருடைய மனுவை ஏற்றுக்கொண்டு Mere serviceல் மின் இணைப்பு வழங்கவும், Distribution Standards of Performances Regulation-படி மின்இணைப்பு வழங்காமைக்கு ஈட்டுத்தொகை ரூ.1000/– வழங்கவும் தக்க தீர்ப்பினை வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

## 2. வழக்கின் சுருக்கம்

2.1 மேல்முறையீட்டாளர் தோளூர் கிராமம் சர்வே எண். 69/1A-ல் உள்ள கிணற்றிற்கு III A1-ல் மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் அளித்துள்ளார்.

2.2 மேற்கண்ட மின் இணைப்பை mere service என்ற பிரிவில் கம்பம் நடாமல் மின் இணைப்பு வழங்கப்படவில்லை என்பதால் நாமக்கல் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு 31.7.2015 அன்று மனு செய்துள்ளார்.

2.3 தலைவர், மின்குறைதீர்க்கும் மன்றம், நாமக்கல் மின் பகிர்மான வட்டம் அவர்கள் சம்பந்தபட்ட உதவி செயற்பொறியாளர், செயற்பொறியாளர் அவர்களிடம் கோரிக்கையை தெரிவித்து மேற்படி உயர் அலுவலர்களால் அளிக்கப்படும் விளக்கம் மனுதாரருக்கு ஏற்புடையதாக இல்லாதபட்சத்தில் மட்டுமே மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகி மனு அளிக்க வேண்டும் என்று தெரிவித்து மனுவை தள்ளுபடி செய்துள்ளதால் இந்த மேல்முறையீட்டு மனுவை சமர்ப்பித்துள்ளார்.

## 3. மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்கள்

3.1 அவர் நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், தோளூர் கிராமம், சர்வே எண்.69/1A–ல் உள்ள கிணற்றிற்கு (Horticulture) IIIA–1 (T.F. Order 6.17 VIII தோட்டக்கலை) மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் அதற்கான ஆவணங்களுடன் அதற்கான பதிவு கட்டணம் ரூ.50/– இணைப்பு கட்டணம் ரூ.1550/–க்கு வரைவு ஓலைகளை இணைத்து 23.6.2015 ஆம் தேதி பதிவு அஞ்சலில் உதவி பொறியாளர்/அணியாபுரம், அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார்.

3.2 அவருடைய மின்சார விண்ணப்பத்தை மட்டும் வரைவோலை ரூ.50க்கு இரசீது எண்.ERM232 ARI D531–படி 30.6.2015ஆம் தேதி பதிவு செய்து ரூ.1550/–க்கான வரைவோலையை க.எண்.உ.பொ/இ.ப./அணி/க.தனி/எண்.165/2015 நாள் 3.7.2015–ன் படி "தங்களது விண்ணப்பம் அனுமதி பெறப்பட்ட பிறகு மீதி தொகையை செலுத்த தகவல் தெரிவிக்கப்படும்" என தெரிவித்து விட்டார்கள்.

3.3 அவர் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் பகிர்மான விதித்தொகுப்பு 30(12)–ன் படி மின் கம்பத்திலிருந்து 110 அடி தூரத்தில் மின் வழங்கல் தரப்படும் மின் அளவீட்டுப்புள்ளி அமைத்துள்ளார் (service room) ஆகவே, அவர் விண்ணப்பித்த விண்ணப்பம் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் பகிர்மான விதித்தொகுப்பு 30(12)–ன் படி சரியாக விண்ணப்பித்திருந்த போதிலும் அவருக்கு மின்இணைப்பு (mere service)இல் வழங்காமல் அவருடைய வரைவு ஓலை ரூ.1550/–ஐ திரும்ப அனுப்பியதுடன் அவர் தலைவர் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு விண்ணப்பிக்கும் வரை 31.7.2015 அத்தொகையை மீண்டும் செலுத்த தகவல் ஏதும் அளிக்கவில்லை.

3.4 தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் பகிர்மான விதித்தொகுப்பு 30(12)–இன் படி அவருடைய விண்ணப்பம் முறையாக mere service ஆக இருந்தும் விண்ணப்பத்திற்கு மின் இணைப்பு மின்சார பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகள் (Distribution Standard of Performance Regulations)–ன் படி

மின்இணைப்பு வழங்காமையால் தலைவர், மின் குறைதீர்க்கும் மன்றம், நாமக்கல் அவர்கட்கு 31.7.2015 ஆம் தேதி விண்ணப்பித்தார்.

3.5 தலைவர், மின்குறைதீர்க்கும் மன்றம் (CGRF) க.எண்.மே.பொ./நா.மி.ப.வ/நா/உ.செ.பொ/வளர்/உ.பொ.உ./மு.நி.வ/கோ.மி.கு.தி.ம.மனு எண்.8/2015–2016 எண்.1021/205 நாள் 11.8.2015ஆம் தேதி கடிதத்தில் உதவிப் பொறியாளர்/இ.ப/ அணியாபுரம் அளிக்கப்பட்ட மனுவிற்கு உதவிப் பொறியாளர் அவர்களால் வழங்கப்படும் விளக்கத்திற்கு ஆட்சேபனை இருக்கும்பட்சத்தில் தாங்கள் சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர்/இ.ப/மோகனூர் மற்றும் செயற்பொறியாளர்/இ.ப/ பரமத்தி வேலூர் அவர்களை அணுகி தங்கள் கோரிக்கை தெரிவித்து மேற்படி உயர் கள அலுவலர்களால் வழங்கப்படும் விளக்கம் தங்களுக்கு ஏற்புடையதாக இல்லாத பட்சத்தில் மட்டுமே மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகி மனு அளிக்க வேண்டும். அவர்களிடம் பரிகாரம் கோராமல் நேரடியாக மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு அளித்ததால் மனுவை தள்ளுபடி செய்கிறேன் என தெரிவித்துவிட்டார்.

3.6 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகள் பகுதி II 6–ன் படி உரிமம் பெற்றவர்களின் அலுவலக பணியாளரால் மனுதாரர்களின் குறைகள் தீர்க்கப்படாமல் இருந்தால் அவர்கள் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகலாம் என்ற போதிலும் தலைவர், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் நாமக்கல் அவர்கள் அவருடைய மனுவை தள்ளுபடி செய்தது நடைமுறைக்கு புறம்பானதாகும்.

3.7 மேற்கண்டவற்றை பரிசீலனை செய்து அவருடைய மனுவை ஏற்றுக்கொண்டு mere service-ல் மின்இணைப்பு வழங்கவும் (Distribution Standard of Performance Regulations)–ன் படி மின்இணைப்பு வழங்காமைக்கு ஈட்டுத்தொகை ரூ.1000/– வழங்கவும் தக்க தீர்ப்பினையும் வழங்க கேட்டுக் கொண்டுள்ளார்.

4. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u>

4.1 திரு. கே. வேலுசாமி, த/பெ கருப்பண்ணன்,அணியாபுரம் கிராமம் அவர்கள், தோளூர் கிராமத்தில் அவருக்கு சொந்தமான சர்வே எண்.69/1A-ல் உள்ள திறந்தவெளிக்கிணற்றிற்கு (Horticulture) தோட்டக்கலை (T.F.IIIA1) ஒரு முனை மின் இணைப்பு வேண்டி அதற்குரிய விண்ணப்பத்துடன் வருவாய்துறை ஆவணங்கள் இணைத்து அதனுடன் விண்ணப்ப பதிவு கட்டணத்திற்கு ரூ.50/–க்கான வரைவோலை மற்றும் மின்இணைப்பு கட்டணமாக ரூ.1550/க்கான க்கான வரைவோலை இணைத்து உதவி பொறியாளர்/இ&ப/அணியாபுரம் அலுவலகத்திற்கு பதிவு தபால் மூலம் அனுப்பியுள்ளார். அவரது தபால் அணியாபுரம் பிரிவு அலுவலகத்தில் பெறப்பட்டு அவரது விண்ணப்பம் 30.6.2015 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

4.2 பதிவு கட்டணம் ரூ.50 ரசீது எண்.ERM232 ARI D531, dt.30.6.2015 விண்ணப்பத்தின் அடிப்படையில் திறந்தவெளிக்கிணற்றினை ஆய்வு செய்ததில் மின்இணைப்பு கோரும் கிணறானது ஏற்கனவே உள்ள LT மின்பாதையில் உள்ள கம்பத்திலிருந்து 51 மீட்டர் தூரத்தில் உள்ளதாக அளவீடு செய்யப்பட்டது. இது தோட்டக்கலை மின்இணைப்பு என்பதால் விவசாய மின்இணைப்பு வழங்குவதற்கான வழிகாட்டுதலின்படி விண்ணப்ப கிணறு சர்வீஸ் point ஆக எடுத்து கொள்ளப்பட்டது. கிணறானது கம்பத்திலிருந்து 120 அடிக்கு மேல் வருவதால் வாரிய விதிமுறைப்படி கம்பம் அமைக்க வேண்டியுள்ளதால் இக்கோப்பானது extension category-ல் வைக்கப்பட்டு மதிப்பீடு தயார் செய்து, மதிப்பீடு அனுமதி பெறப்பட்டு அனுமதி தொகை செலுத்த தகவல் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

4.3 மின்இணைப்பு கட்டண தொகைக்கான வரைவோலையை 3.7.2015 நாளிட்ட கடிதத்துடன் உதவிப் பொறியாளர்/இ&ப/அணியாபுரம் விண்ணப்பதாரருக்கு திருப்பி அனுப்பியுள்ளார்.

4.4 ஒரு கம்பம் அமைக்கும் வகையில் (கம்பம் மற்றும் லைன் அமைக்கும் இடம் விண்ணப்பதாரரின் நிலம்) மதிப்பீடு தயாரித்து அனுமதி எண்.626/A32/134/15–16, dt.25.7.2015–ன் படி பெறப்பட்டுள்ளது. பிறகு 31.7.2015 நாளிட்ட கடிதத்தின்படி மதிப்பீடு

தொகை மற்றும் இணைப்பு தொகையாக ரூ.15810/—யை செலுத்த விண்ணப்பதாருக்கு பதிவு தபால் மூலம் அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டது.

4.5 ஆனால், மேற்படி விண்ணப்பதாரார் தோட்டக்கலை மின் இணைப்பு விவசாய பயன்பாட்டு வகையை சார்ந்ததால் கிணற்றிற்கு அருகில் சர்வீஸ் ரூம் அமைக்காமல் கம்பத்திலிருந்து 110அடி தூரத்தில் சர்வீஸ் ரூம் அமைத்து Mere Service ஆக மின்இணைப்பு வழங்க கோரியுள்ளார். எனவே, வாரிய விதிமுறைப்படி கம்பத்திலிருந்து 120 அடிக்கு மேல் கிணறு அமைந்துள்ளதால் (51 மீட்டர் தொலைவில்) விவசாய பயன்பாட்டை சார்ந்த இந்த தோட்டகலை மின் இணைப்பு வழங்க ஒரு கம்பம் அமைத்து தான் வழங்க இயலும். அதற்கான மதிப்பீடு தொகை மற்றும் இணைப்பு தொகையை வாரியத்திற்கு விண்ணப்பதாரார் செலுத்த வேண்டும். ஆனால், விண்ணப்பதாரார் இதுநாள் வரை மதிப்பீடு தொகை செலுத்தவில்லை.

4.6 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் விதி II6(1) மற்றும் 2—ன் படி மேல்முறையீட்டு விண்ணப்பதாரார் கோரிக்கையை உயர் கள அலுவலர்களான உதவி செயற்பொறியாளர்/இ&ப/ மோகனூர் மற்றும் செயற்பொறியாளர்/இ&ப/பரமத்தி வேலூர் அவர்களை அணுகி பரிகாரம் கோராமல் நேரடியாக மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு அனுப்பியிருந்ததால் கோரிக்கை தொடர்பாக மேற்படி கள அலுவலகர்களை அணுகி மனு அளித்து கள அலுவலர்களால் வழங்கப்படும் விளக்கம் ஏற்புடையதாக இல்லாத பட்சத்தில் தாங்கள் தெரிவிக்க வேண்டிய தங்களுடைய கோரிக்கை குறித்து இம் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் மனு அளிக்குமாறு கோரி க.எண்.மே.பொ/நா.மி.ப.வ/நா./ உ.செ.பொ/வளர்/உ.பொ2/ முநிவ/கோ.மிகுதிம—மனு எண்.8/2015—16/எண்.1021/2015 நாள் 11.8.2015—ன் படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

4.7 மேல்முறையீட்டு விண்ணப்பதாரார் மதிப்பீடு தொகை மற்றும் இணைப்பு தொகையை இதுநாள்வரை செலுத்தாத காரணத்தால் (Distribution Standards of Performance

Regulations)–ன்படி மின்இணைப்பு வழங்காமைக்கு இழப்பீட்டு தொகை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

5.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களுடைய தரப்பு வாதத்தை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 24.11.2015 அன்று மின்குறைதீர்ப்பாளரால் கேட்புரை நடத்தப்பட்டது.

5.2 மேல்முறையீட்டாளர் திரு. கே. வேலுச்சாமி அவர்களும், திரு. K. இராசப்பன் அவர்களும் மேல்முறையீட்டாளரின் சார்பில் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தனர்.

5.3 திரு. மோகன சுப்பரமணியன், உதவி செயற்பொறியாளர்/மோகனூர் அவர்களும் திரு. S. சக்திவேல், உதவிப் பொறியாளர், அணியாபுரம் அவர்களும் கலந்துகொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தனர்.

6. <u>மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி கேட்புரையின்பொழுது எடுத்துரைத்த வாதங்கள்</u>

6.1 மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி திரு. K. இராசப்பன் அவர்கள் மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

6.2 திரு. K. இராசப்பன் அவர்கள் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதி 6(1)–ன் படி உரிமம் பெற்றவர்களின் அலுவலர்களால் மனுதாரரின் குறைகள் தீர்க்கப்படாமலிருந்தால் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகலாம் என்று உள்ளது. எனவே, உதவி பொறியாளர் மின்இணைப்பு விண்ணப்பம் பெற்று ஒரு மாத காலத்திற்குள் தரவில்லை என்பதால் மன்றத்தை அணுகியது மன்ற விதிகளின்படிதான் என்றும், மேல்முறையீட்டாளரின் மனுவை மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தள்ளுபடி செய்தது தவறு என்றும் வாதிட்டார்.

6.3 மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி 30(12)ஐ சுட்டிக்காட்டி மேற்கண்ட விதியின்படி அவர் அமைத்துள்ள service room மின்கம்பத்திலிருந்து 110 அடிகள் தூரத்தில்

உள்ளதால் அந்த இடத்தில் மின்னளவியை பொருத்தி அவருக்கு மின்இணைப்பை mere service என்ற முறையில் வழங்க வேண்டும் என்றும், அங்கிருந்து அவர் தன்னுடைய கிணற்றிற்கு உரிய பாதுகாப்பு விதிகளின்படி மேனிலை மின்தொடர் (OH line) அல்லது மின் வடங்களையோ அமைத்து கொள்வதாகவும் வாதிட்டார். மேற்கண்ட வகையில் மின் இணைப்பு பெறுவது மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் 30(12)–ன் படி தான் என்பதால் அது ஒழுங்குமறை ஆணையம் விதித்துள்ள விதிகளின்படி உள்ளது என்றும் வாதிட்டார்.

6.4 மேற்கண்ட முறையில் மின்இணைப்பு வழங்கினால் அது mere service என்பதால் மின்சார பகிர்மான செயல்திறச்செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி 30 நாட்களுக்குள் மின்இணைப்பு வழங்கப்பட்டு இருக்க வேண்டும். ஆனால், இதுவரை மின்இணைப்பு வழங்கப்படவில்லை. எனவே, மின்சார பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான விதி 21–ன் படி தாமதத்திற்கு இழப்பீடு தொகையாக ரூ.1000/– வழங்க வேண்டும் என்றும் வாதுரை புரிந்தார்.

## 7. <u>எதிர்மனுதாரரின் பிரதிநிதி கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 திரு. மோகன சுப்பிரமணியன், உதவி செயற்பொறியாளர்/மோகனூர் அவர்கள் கேட்புரையில் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை மீண்டும் எடுத்துரைத்தார்.

7.2 உதவி செயற்பொறியாளர்/மோகனூர் அவர்கள் மின்சாரப் பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 20(vi)ஐ சுட்டிக்காட்டி உயர் அலுவலர் அளவில் முறையீட்டை கொண்டு சென்றும் தீர்வு கிடைக்கவில்லை என்றால்தான் குறைதீர்மன்றத்தை அணுகலாம். ஆனால், உரிய உயர் அதிகாரிகளான உதவி செயற்பொறியாளர் அல்லது செயற்பொறியாளர் அவர்களிடம் மனு செய்யாமல் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்யப்பட்டதால்தான் மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்று வாதிட்டார்.

7.3 மேல்முறையீட்டாளர் கோரியிருக்கும் மின்இணைப்பு தோட்டக்கலை IIIA–1 மின்இணைப்பு ஆகும். விண்ணப்பத்துடன் அனுப்பியுள்ள கடிதத்திலும் கிணற்றிற்குதான் மின்இணைப்பு வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மின்இணைப்பு கிணற்றிலிருந்து நீர் இறைக்க பயன்படுத்துவதற்காக என்பதால் கிணற்றின் அருகில்தான் மின்இணைப்பு தரவேண்டும். மேற்கண்ட கிணறு அதன் அருகிலுள்ள தாழ் அழுத்த மின்பாதையிலிருந்து 51 மீட்டர் தூரத்திலுள்ளதால் அதாவது 36.56 மீட்டருக்கும் அதிகமாக உள்ளதால் அது mere service என்ற பிரிவில் வராது என்றும் கம்பம் அமைத்துதான் மின்இணைப்பு வழங்கப்பட வேண்டும் என்று வாதுரை புரிந்தார்.

7.4 மேலும், மின் விஸ்தரிப்பு பணி மின்நுகர்வோரின் இடத்தில் வருவதால் அதற்குரிய மதிப்பீட்டு தொகை மற்றும் இதரக் கட்டணங்களுடன் சேர்த்து ரூ.15810/–ஐ வாரியத்திடம் செலுத்தவேண்டும் என்று 31.7.2015 நாளிட்ட கடிதத்தில் நுகர்வோருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றும், ஆனால், பணம் செலுத்தவில்லை என்றும் தெரிவித்தார். மேலும், அவர் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு இது சம்பந்தமாக மனு செய்து மனு தள்ளுபடி செய்யப்பட்டதால் தற்பொழுது மின்குறைதீர்ப்பாளரிடம் மேல்முறையீடு செய்துள்ளார் என்றும் தெரிவித்தார்.

7.5 மேலும், பிரிவு அலுவலகத்தில் அவர் minor extension categoryல் 3வது நபராக உள்ளார் என்றும் எனவே, அவர் மேற்கண்ட ரூ.15810/–ஐ செலுத்தினால் 2 மாத காலங்களுக்குள் மின்இணைப்பை வழங்க முடியும் என்றும் தெரிவித்தார்.

7.6 மேலும், இதுவரை வாரியம் கோரியுள்ள மின்இணைப்பிற்கான மதிப்பீட்டு பணத்தை செலுத்தவில்லை என்பதால் அவர் இழப்பீடு தொகை எதையும் கோரமுடியாது என்றும் வாதுரை புரிந்தார்.

## 8. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

8.1 இந்த மேல்முறையீட்டாளரின் மனுவை ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்கண்டவைகள் அவரின் கோரிக்கைகள் என்று அறியமுடிகிறது.

(i) அவருடைய மனுவை ஏற்றுக்கொண்டு mere service என்ற முறையில் அவருடைய விண்ணப்பத்திற்கு மின்இணைப்பை வழங்க வேண்டும்.

(ii) மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின் இணைப்பை வழங்காமைக்கு ஈட்டுத் தொகை ரூ.1000/– வழங்க வேண்டும்.

8.2 மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு கோரிக்கை வாரியாக கீழே தரப்பட்டுள்ளது.

## 9. <u>கோரிக்கை ஒன்றிற்கானதீர்வு</u>

9.1 மேல்முறையீட்டாளர் அவரின் service room அருகிலுள்ள தாழ்வழுத்த மின் பாதையின் மின்கம்பத்திலிருந்து சுமார் 110 அடியில் அமைக்கப்பட்டுள்ளது அது mere service கொடுப்பதற்கான வாரிய விதிமுறையான 120 அடிக்குள் அமைந்துள்ளது. எனவே, மின்இணைப்பை mere service categoryல் தரவேண்டும் என்றும் அந்த service roomலிருந்து கிணற்றிற்கு அவர் தன்னுடைய செலவில் மின் பகிர்மான விதி 30(12)–ல் தெரிவித்துள்ளபடி பாதுகாப்பான மின்பாதை அமைத்து கொள்வதாகவும் எனவே அவரின் கோரிக்கை மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 30(12)ற்கு இணங்க உள்ளது என்று தெரிவித்து மின்இணைப்பை Mere service என்ற categoryஇல் வழங்க கோரியுள்ளார்.

9.2 எதிர்மனுதாரர் தோட்டக்கலை என்று தோட்டப்பயிர்களுக்கு நீர் இறைப்பதற்குதான் மேற்கண்ட மின்இணைப்பு கோரப்படுகிறது. எனவே, கிணற்றிற்குதான் மின் இணைப்பு வேண்டும். அவ்வாறுதான் விண்ணப்பத்துடன் அனுப்பப்பட்ட கடிதம்மற்றும் ஆவணங்களிலும் தெரியப்படுத்தப்பட்டுள்ள்து. எனவே, Point of supply கிணற்றிற்கு அருகில்தான் வரும். கிணற்றிற்கும் அதன் அருகில் அமைந்துள்ள தாழ் அழுத்த மின்பாதைக்கும் உள்ள இடைவெளி 51 மீட்டர் ஆகும். அது ஒரு mere service கொடுப்பதற்கான 36.56 மீட்டர் தூரத்திற்கும் அதிகமாக உள்ளதால் mere service என்ற வகையில் மேற்கண்ட

விண்ணப்பத்திற்கு மின் இணைப்பை தரமுடியாது என்று வாதிட்டார். மேலும், அது விஸ்தரிப்பு (extension) என்ற பிரிவின் கீழ்தான் வரும் என்றும் வாதிட்டுள்ளார்.

9.3 மேலும், தற்சமயம், மேற்கண்ட பிரிவு அலுவலகத்தில் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் minor extension என்ற பிரிவில் 3வது முன்னுரிமையிலுள்ளது என்றும் மேல்முறையீட்டாளர் ஏற்கெனவே 31.7.2015 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள மதிப்பீட்டு தொகையை செலுத்தினால் இரண்டு மாத காலத்திற்குள் உரிய தளவாட சாமான்களைப் பெற்று மின்பாதையை அமைத்து மின்இணைப்பை வழங்க முடியும் என்றும் தெரிவித்தார்.

9.4 மேற்கண்ட விளக்கத்தை கேட்ட பின்பு மேல்முறையீட்டாளர் திரு. கே. வேலுச்சாமி அவர்கள் அவ்வாறு இரண்டு மாதத்திற்குள் மின் பாதையமைத்து மின்இணைப்பை தரமுடியும் என்றால் மதிப்பீட்டு தொகையை செலுத்தி minor extension என்ற பிரிவில் மின்இணைப்பை பெற்றுக் கொள்வதற்கு அவர் சம்மதிப்பதாக தெரிவித்தார்.

9.5 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் மேற்கண்ட கோரிக்கையில் ஒருமித்த கருத்திற்கு வந்துவிட்டதால் இருவருக்கும் கருத்து வேற்றுமையில்லை என்று தெரிகிறது.

9.6 எனவே, எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்திற்கான மின்இணைப்பினை இரண்டு மாத காலத்திற்குள் வழங்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10. <u>கோரிக்கை இரண்டிற்கான தீர்வு</u>**

10.1 மேல்முறையீட்டாளர் அவருடைய மின்இணைப்பு கோரும் விண்ணப்பம் 30.6.2015–ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அது mere service என்ற பிரிவில் வருவதால் 30 நாட்களுக்குள் மின் இணைப்பு கொடுக்கப்பட்டு இருக்க வேண்டும். ஆனால், அவருக்கு இதுநாள் வரை மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. எனவே, மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி இழப்பீட்டுத்தொகை ரூ.1000/– வழங்கப்படவேண்டும் என்று வாதிட்டார்.

10.2 எதிர்மனுதாரர், மேல்முறையீட்டாளரின் கிணறு ஏற்கனவே உள்ள தாழ்வழுத்த மின்பாதையிலுள்ள கம்பத்திலிருந்து 51 மீட்டர் தூரத்தில் உள்ளது. இது தோட்டக்கலைக்கான மின்இணைப்பு என்பதால் மின்இணைப்பு நீர் இறைக்கப் பயன்படுத்துவதால் கிணற்றின் அருகில்தான் Point of supply எடுத்துக் கொள்ளப்படல் வேண்டும். Mere service என்பது மின் கம்பத்திலிருந்து 36.56 மீட்டர் தூரம் வரையிலுள்ள Point of supply க்குதான் பொருந்தும். எனவே, மேற்கண்ட கிணற்றிற்கு மின்இணைப்பு வழங்க மின்கம்பம் நட்டு மின்பாதை அமைத்துதான் மின்சாரம் வழங்க முடியும். மேற்கண்ட மின்பாதை அமைக்கும் இடம் மேல்முறையீட்டாளரின் சொந்த நிலம் என்பதால் மேல்முறையீட்டாளர் மின்பாதையின் மதிப்பீட்டுதொகை மற்றும் மின் இணைப்புக்கான கட்டணங்கள், காப்புத்தொகை முதலியன செலுத்த வேண்டும் என்று 31.7.2015 நாளிட்ட கடிதம் மூலம் தெரியப்படுத்தப்பட்டது. ஆனால், மேல்முறையீட்டாளர் இதுநாள் வரை கட்டணங்களை செலுத்தவில்லை. மேலும், அவருடைய கோரிக்கையை மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளரிடமும் சமர்ப்பித்துள்ளதால் அவரின் விண்ணப்பத்தின் மீது வேறு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் வாதிட்டார். எனவே, மின்இணைப்பு பெறுவதற்கான கட்டணங்களை செலுத்தவில்லை என்பதால் மின்இணைப்பை வழங்க முடியாத நிலை இருந்தது. எனவே, மின்இணைப்புக்கான கட்டணங்கள் செலுத்தாத நிலையால் மின்இணைப்பு வழங்க வில்லை என்று ஈட்டுத்தொகை கோரமுடியாது என்றும் வாதிட்டார்.

10.3 மேற்கண்ட வாதுரையை கேட்ட பின்பு மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரர் மின் இணைப்பை இரண்டு மாதங்களுக்குள் வழங்கி விடுவதாக தெரிவித்துள்ளது அவருக்கு ஏற்புடையதாக உள்ளதால் அவர் ஈட்டுத்தொகை வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தவில்லை என்றும் தெரிவித்தார். எனவே, மேற்கண்ட கோரிக்கையின் மீது தீர்வு எதுவும் தேவையில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

10.4 நாமக்கல் மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், இந்த மேல்முறையீட்டாளரின் மனு உயர் கள அலுவலர்களான உதவி செயற்பொறியாளர்/இ.ப/ மோகனூர் மற்றும் செயற்பொறியாளர்/இ.ப/பரமத்தி வேலூர் அவர்களை அணுகி பரிகாரம் கோரமல் நேரடியாக மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு அளித்துள்ளதால் மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று தீர்வு செய்துள்ளது. இது சம்பந்தமாக நான் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதித்தொகுப்பின் விதி **6(1)** ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"**6 (1)** மன்றம் பற்றிய விவரங்களை மன்றத்தின் முகவரி, தொலைபேசி எண்கள் மற்றும் மின் அஞ்சல் முகவரி ஆகியவற்றை உரிமம் பெற்றவர் பொது மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலமாக அவ்வப்போது தெரியப்படுத்திட வேண்டும். மனுக்களை பதிவு செய்வதற்கான நடைமுறை பற்றிய நகல்களை மனுதாரர்களுக்கு இலவசமாய் கிடைத்திட உரிமம் பெற்றவர் வகை செய்திட வேண்டும். நுகர்வோர்களுக்கு உரிமம் பெற்றவரால் வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் / பட்டியல்கள் / ரசீதுகள் ஆகியவற்றில் உரிய மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தின் முகவரி குறிப்பிட்டிருக்க வேண்டும். மற்றும் "உரிமம் பெற்றவரின் அலுவலக பணியாளரால் மனுதாரர்களின் குறைகள் தீர்க்கப்படாமல் இருந்தால், அவர்கள் மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தை அணுகலாம்" என்ற அறிவிப்பும் அச்சிடப்பட்டிருக்க வேண்டும்."*

10.5 மேற்கண்ட விதியினை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது, உரிமம்பெற்றவரின் அலுவலக பணியாளரால் மனுதாரர்களின் குறைகள் தீர்க்கப்படாமலிருந்தால் அவர்கள் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தினை அணுகலாம் என்று தெரிகிறது.

10.6 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கான ஒழுங்குமுறைவிதிகளில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதால் அந்த விதிகள்தான் மன்றத்திற்கு பொருந்தும் என்பதால் கள உயர் அதிகாரிகளை அணுகி அவர்களிடம் கோரிக்கையை தெரிவித்து அவர்களின் விளக்கம் பெற்று அது திருப்தியில்லை எனில்தான் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகவேண்டும் என்ற மன்றத்தின் ஆணை ஏற்புடையது இல்லை.

11. <u>முடிவுரை</u>

11.1 தோளூர் கிராமத்தில் மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான சர்வே எண்.69/1Aல் உள்ள திறந்தவெளி கிணற்றிற்கு தோட்டக்கலை மின் இணைப்பு கோரிய விண்ணப்பத்திற்கு உரிய தளவாட சாமான்களை பெற்று இரண்டு மாதத்திற்குள் மின்இணைப்பு வழங்கப்படும் என்ற எதிர்மனுதாரரின் வாதத்தை ஏற்று மேல்முறையீட்டாளர் 31.7.2015 நாளிட்ட கடிதத்தில் கூறியுள்ள மின்இணைப்பு கட்டணங்கள் மற்றும் மதிப்பீட்டு கட்டணம் ஆகியவற்றை செலுத்தி மின்இணைப்பை பெற்றுக் கொள்கிறேன் என்று சம்மதம் தெரிவித்துள்ளதால் இருதரப்பு சம்மதத்துடன் கீழ்கண்ட தீர்வு வழங்கப்படுகிறது.

(i) தோளூர் கிராமத்தில் மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான சர்வே எண்.69/1Aல் உள்ள திறந்தவெளி கிணற்றிற்கு தோட்டக்கலை (Tariff IIIA–1) மின்இணைப்பு இந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட இரண்டு மாதத்திற்குள் வழங்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

(ii) மேல்முறையீட்டாளர் உதவிப் பொறியாளர்/இ&ப/ அணியாபுரம் அவர்களின் 31.7.2015 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள கட்டணங்களை இந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

11.2 எதிர்மனுதாரர் இந்த ஆணையை நிறைவேற்றியது சம்பந்தமான அறிக்கையை இந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட 75 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவு இடப்படுகிறது.

11.3 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.70/2015 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. K. வேலுச்சாமி,
த/பெ கருப்பண்ணன்,
க.எண்.2/175, சக்தி கார்டன்,
அணியாபுரம், நாமக்கல மாவட்டம்,
நாமக்கல – 637 017.

2) மேற்பார்வை பொறியாளர்,
நாமக்கல் மின் பகிர்மானவட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ஸ்ரீ கிருஷ்ணா வளாகம்,
32/1, கருப்பண்ணன் தெரு,
பரமத்தி ரோடு, நாமக்கல் – 637001

3) உதவி பொறியாளர்/இ &ப,
அணியாபுரம்,
நாமக்கல் மின் பகிர்மானவட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மோனூர் மெயின் ரோடு,
நாமக்கல் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.